# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.242/2019

வா.சா.3– குறுக்கு விசாரணை – நாள் 28–04–2026.

பெயர் = மாரையா

வா.சா.–3 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.–

(1) நான் இந்த வழக்கில் 3ம் தரப்பினர் என்றால் சரிதான். இந்த வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அழகர்சாமியின் மக்கள் தாக்கல் செய்துள்ளார்கள். இந்த வழக்கு யார்மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது, எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தனுஷ்கோடி மீது போட்டுள்ளார்கள், இடத்தை எழுதிக்கொடுத்ததை இல்லை என்று சொன்னதால் வழக்கு போட்டுள்ளார்கள். யாரெல்லாம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் தனுஷ்கோடியும், மூக்கநாயக்கர் என்ற அழகர்சாமி நாயக்கர் சேர்ந்தும் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என சாட்சி கூறுகிறார். வாதிகள் என் உறவினர்கள் என்றால் சரிதான். வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தான் நான் நீதிமன்றத்திற்கு சாட்சிமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலம் வாதியின் வழக்கறிஞர் தயாரித்ததுதான் என்றால் சரிதான். அந்த நிரூபணவாக்குமூலத்தில் சொல்லிய விவரங்கள் அனைத்தும் கரந்தமலை அவரது வக்கீலிடம் சொன்னது என்றால் சரிதான். நிரூபணவாக்குமூலத்தில் என்ன விசயங்கள் சொல்லப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

(2) நான் நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜராகி எனது சாட்சியவாக்குமூலத்தை எழுத்துமூலமாக தாக்கல் செய்கிறேன் என சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண்.80/11. தாவாச்சொத்து ஆதியில் 1ம் பிரதிவாதியின் தந்தை மூக்கநாயக்கர் என்ற அழகர்சாமிநாயக்கரின் தந்தை பெருமாள் நாயக்கருக்கு பாத்தியமானது. தாவாச்சொத்தை தற்போது தனுஷ்கோடி நாயக்கர் வகையறா தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மூன்று பேர் அனுபவித்து வருகிறார்கள் கரந்தமலை, ராமபாண்டி,

தனுஷ்கோடி ஆகியோர் அனுபவம் செய்து வருகிறார்கள். வாதிகள் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கும்போதே தாவாச்சொத்தில் தனுஷ்கோடி அனுபவம் செய்துவருவதாக சொல்லியுள்ளார்கள். அதற்கு முரணாக நான் நீதிமன்றத்தில் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச்சொத்து கரந்தமலையின் தந்தைக்கு தனுஷ்கோடி நாயக்கரும், மூக்கநாயக்கரும் சேர்ந்து 1986ம் வருடம் எழுதிக்கொடுத்தார்கள் தேதி ஞாபகமில்லை. மேற்படி ஆவணத்தை எங்குவைத்து யார் தயாரித்தார்கள் என்றால் கோபால்பிள்ளை என்ற வெண்டர் தயாரித்தார் திருச்சுழி சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தயாரித்தார்கள். வெண்டர் ஆபிசில் கையெழுத்து செய்தோம். நானும், சின்ன அழகர் என்பவரும் கையெழுத்து செய்தோம்.

(3) நான் கையெழுத்து செய்வதற்கு முன்பாகவே தனுஷ்கோடி அதில் கையெழுத்து செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் தனுஷ்கோடி நாயக்கர் எத்தனாவது கையெழுத்து செய்திருந்தார் என்றால் 2வதாக கையெழுத்து செய்திருந்தார். தனுஷ்கோடி என்பவரின் கையெழுத்து தெரியுமா என்றால் எனக்கு தற்போது ஞாபகமில்லை. மொத்தம் 24 செண்ட் இடம் ஆளுக்கு 8 செண்ட் இடம் என கிரையம் ஆவணம் எழுதிக்கொடுத்தார் என சாட்சி கூறுகிறார். கிரையத்தொகை எவ்வளவு என்றால் அது எனக்குத் தெரியாது. என் முன்பாக கொடுக்கவில்லை. சார்பதிவாளர் கிரையத்தொகையை கேட்டாரா என்றால் தொகையை வாங்கிவிட்டீர்களா என கேட்டார் வாங்கினோம் என சொன்னார்கள் என சாட்சி கூறுகிறார். தாவா சொத்தின் நான்குமால் விவரம் தெரியுமா என்றால் தெரியும் சுந்தர்ராஜ் நாயக்கர் சொத்துக்கும் வடக்கே, பொன்னுச்சாமி நாயக்கர் இடத்திற்கும் மேற்கே, பெருமாள் நாயக்கர் சொத்திற்கும் தெற்கே, பெருமாள் நாயக்கர் இடத்திற்கும் கிழக்கே என சாட்சி கூறுகிறார். தாவா சர்வே எண்ணில் எந்தப்பக்கத்தில் அழகர்சாமி நாயக்கர் கிரையம் கொடுத்தார் என்றால் கிழக்குப்பக்கம் என சாட்சி கூறுகிறார். நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தில் சர்வே எண்.80/11ல் செண்டு 24ல் மேல்புறம் 8 செண்டு என சொல்லியிருந்தால் தவறு என்றால் சரிதான். அழகர்சாமி நாயக்கர் எந்ததேதியில் இறந்தார் என எனக்கு ஞாபகமில்லை.

(4) எந்த தேதியில் தனுஷ்கோடி நாயக்கர் 2ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் கொடுத்தார் என தெரியுமா என்றால் தேதி தெரியாது 2018ம் வருடம். எந்த சர்வே எண்ணில் உள்ள சொத்தை 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சர்வே எண்.80/11ல்

உள்ள சொத்தை எழுதிக்கொடுத்துள்ளார். ஆவண எண் எனக்குத் தெரியாது. வாதிகளும், பிரதிவாதிகளும் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை செய்த விவரம் எனக்கு நேரடியாகத் தெரியுமா என்றால் தெரியாது. இதற்குமுன் நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தாவாச்சொத்து பத்திரத்தில் உள்ள கையெழுத்து தனுஷ்கோடி நாயக்கரின் கையெழுத்து இல்லை வாதிகள் என் உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அழகர்சாமி நாயக்கர் எழுதிக்கொடுத்த ஆவணத்தில் நான் இரண்டாவதாக கையெழுத்து செய்துள்ளேன். என்னுடன் சாட்சி கையெழுத்து செய்த சின்னஅழகர்சாமி இறந்துவிட்டார். தனுஷ்கோடி நாயக்கருடன்பிறந்த அண்ணன் உயிருடன் இல்லை இறந்துவிட்டார். ராமசாமிநாயக்கரை வாதிகள் தாவா வழக்கில் சேர்க்காத விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. அழகர்சாமி நாயக்கர் எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவர் மோசடியாக தயாரித்த ஆவணத்தில் நான் கையெழுத்து செய்து 1ம் பிரதிவாதியின் தந்தைக்கு எதிராக ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி திருச்சுழி சார்பதிவகத்திற்கு வரவே இல்லை மேற்படி ஆவணம் மோசடியானது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.04.28 15:56:27 +0530